பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-CO

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 23 வியாழக்கிழமை (07-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 42

'சுப்பசொனிக்' விமானங்கள் அனர்த்தம்

# சித்தன்கேணி குண்டு வீச்சில் ஒன்பது பேர் உடல் சிதறி பலி!!

## பதினைந்து பேர் காயம்

வலிகாமம் மேற்கு, ஜனவரி 7

ஸ்ரீலங்கா விமானப்படையின் இரு சுப்பசொனிக் விமானங்கள் நேற்று முற்பகல் 10. 35 மணியளவில் சித்தன்கேணியில் — மக்கள் நடமாட்டம் உள்ள கேந்திர வீதிப் பகுதியில் — நடத்திய கண்மூடித் தனமான றொக்கட் தாக்குதலில் ஒன்பது பொது மக்கள் உடல் சிதறிப் பலியானார்கள்; 15 பேர் படுகாயமடைந்தனர்; பெருமளவு உடைமைகள் நாசமாகின.

சித்தன்கேணி — வட்டுக்கோட்டை வீதியில் சித்தன்கேணிச் சந்தியிலிருந்து சற்றுத் தொலைவில் மாதர்சங்க மண்டபத்துக்குச் சற்றுத் தள்ளியும், முரளி அரிசி ஆலைக்கு சற்று முன்பாகவும் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன

நேற்றுக் காலை 10. 35 மணியளவில் சித்தன்கேணி, சங்கானை, வட்டுக்கோட்டைப் பகுதிகளை வட்டமிட்ட இரு சுப்பசொனிக் விமானங்கள் மாறி மாறி சுமார் 25 க்கும் மேற்பட்ட றொக்கட் மோட்டார் ஷெல்களை வீசித் தாக்குதல் நடத்தின.

விமானத்தில் இருந்து சீறிப் புறப்பட்ட றொக்கட்டுகள், வானத்தில் வெடித்துச் சிதற, பல்லாயிரக் கணக்கில் சன்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## விமானக் குண்டு வீச்சில் உயிரிழந்தோர் விவரம்

சித்தன்கேணிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விமானத் தாக்குதலின்போது உயிரிழந்த ஒன்பது பேரில் ஏழு பேரின் சடலங்கள் நேற்றிரவு வரை அடையாளம் காணப்பட்டன

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்த இரண்டு ஆண்களின் சடலங்களும் அடையாளம் காணப்படுவதற்காக யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்த மற்றைய ஏழு பேரினதும் விவரம் வருமாறு:-

இராசதுரை கமலாம்பாள் [வயது 43] காரைநகர் வலந்தலையில் இருந்து இடம்பெயர்ந்தவர் தலையில் மூளைப் பகுதி சிதறி உயிரிழந்தார். இவரின் மகன் ராஜீவ் குமார் [வயது 13] படுகாயமடைந்தார். இவர்கள் தங்கி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## காயமுற்ற 15 பேர்

யாழ்ப்பாணம், ஜன. 7

சித்தன்கேணியில் 'சுப்பசொனிக்' நடத்திய தாக்குதலில் காயமுற்ற 15 பேரின் விவரம் வருமாறு :-

★ இராசதுரை ராஜீவ் குமார் (வயது 15) — காரைநகர் வலந்தலையில் இருந்து இடம்பெயர்ந்தவர்.

★ சிவக்கொழுந்து சந்திரகுமார் [வயது 25] — பெரியவிளானிலிருந்து இடம்பெயர்ந்து மானிப்பாயில் வசிப்பவர். தாக்குதலுக்கு இலக்கான பகுதியில் இருந்த அரிசி ஆலையில் வேலை செய்தவர். இவர் படுகாயமடைந்துள்ளார்.

★ செல்லையா விவேகானந்தன் (வயது 33) — அளவெட்டி வடக்கைச் சேர்ந்தவர். ஆலையில் வேலை செய்தவர்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலையிலிருந்த 80 சிறுவர்கள் தப்பினர்!

யாழ்ப்பாணம், ஜன. 7

நேற்று சித்தன்கேணியில் ஸ்ரீலங்கா விமானப் படையினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலின் போது சிறுவர் பாடசாலை ஒன்றில் பயின்ற 80 சிறுவர்களும் ஆசிரியையும் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்,

சித்தன்கேணி மாதர் சங்க மண்டபத்தில் இயங்கும் சிறுவர் பாடசாலையில் கல்வி பயின்ற பிள்ளைகளே தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

இந்த மண்டபத்துக்கு நூறு யார் தூரத்தில், விமானத்தில் இருந்து வீசப்பட்ட றொக்கட் ஷெல்கள் விழுந்து வெடித்தன. மண்டபத்துக்குச் சற்றுத் தள்ளி வீதியால் சென்று கொண்டிருந்த மூவர் அந்தத்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## இடம்பெயர்ந்தோரே குண்டு வீச்சால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

நேற்று சித்தன்கேணியில் இடம்பெற்ற தாக்குதல்களில் உயிரிழந்த அல்லது காயமடைந்த பலர் வேறு இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம் மேற்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து சித்தன்கேணிப் பகுதியில் தஞ்சம் புகுந்தவர்கள் பலரே விமானத் தாக்குதல்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

சித்தன்கேணிச் சந்தியில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையில், நிவாரணப் பொருள்களைப் பெற்றுக்கொண்டு வீதியால் திரும்பி வந்து கொண்டிருந்த சிலரும் குண்டு வீச்சுக்கு இலக்காகி உயிரிழந்தனர்.

அவர்கள் எடுத்து வந்த நிவாரணப் பொருள்கள் அப்பகுதியில் சிதறிக் கிடந்தன.

[உ-3-175]

## அங்கிலிக்கன் ஆயர் யாழ் வர அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

அங்கிலிக்கன திருச்சபையின் புதிய ஆயர் அதி வண. கென்னத் பெர்னான்டோ யாழ்ப்பாணம் வருவதற்கு அனுமதி வழங்க கூட்டுப் படைத் தலைமையகம் மறுத்துள்ளது.

நேற்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்த தகவலின்படி, கிளிநொச்சி வரை செல்லவே ஆயருக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும்—

அங்கிருந்து கிளாலியூடாக யாழ். செல்ல அவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தெரியவந்தது

அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ முன்னர் செய்யப்பட்ட ஏற்பாட்டின்படி நாளை வெள்ளிக்கிழமை இங்கு விஜயம் செய்யவிருந்தார்.

இதேவேளை—

திட்டமிட்டபடி அவர் நேற்று கிளிநொச்சி செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாகவும் அறியவந்தது.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் புனர்வாழ்வுப் பணிக்கு 11 கோடி 30 லட்சம் ரூபா

### வழங்க ஜேர்மன் அரசு இணக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் புனர்வாழ்வுப் பணிகளுக்கென ஜேர்மன் அரசு 11 கோடி 30 லட்சம் ரூபாவை வழங்க முன்வந்திருக்கிறது.

இத்தகவலை யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பில் இருந்து செயலகத்துக்கு அனுப்பியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் திட்டம் ஒன்றைத் தருமாறு ஜேர்மன் அரசு யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்திடம் அண்மையில் கோரியிருந்தது.

அதனையடுத்து யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவுடன் இணைந்து, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் தயாரிக்கப்பட்ட

[3 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



அப்பா...... சைக்கிள் திருட்டர் பா[illegible] சொல்லுங்கோ......!

## வயாவிளானில் 2 படையினர் பலி

கொழும்பு, ஜன. 7

நேற்று முன்தினம் வயாவிளான் பகுதியில் உள்ள ஸ்ரீலங்காப் படையினரின் அவதானிப்பு நிலையம் ஒன்றைப் புலிகள் தாக்கினர் என்றும்—

இத்தாக்குதலில் இரு சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்[illegible] படைகள் [illegible] அறிவித்தது.

(உ ஏ-6)

## சுழிபுரத்தில் மாணவர்கள் மயங்கினர்

சுழிபுரம், ஜன. 7

சித்தன்கேணியில் நேற்று இடம்பெற்ற விமானத்தாக்குதல் அதிர்ச்சியினால் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்கள் மூவர் வீதியில் மயக்கமுற்று வீழ்ந்தனர். பல மாணவர்கள் கிலி கொண்டு அழுதவாறு ஓடினர்.

மயக்கமுற்ற மாணவர்களுக்கு அப்பகுதி மக்கள் முதலுதவி வழங்கி அவர்களை அவரவர் வீடுகளுக்குக் கொண்டு சென்று சேர்ப்பித்தனர்.

(உ-28)

சைக்கிள்கள் உட்பட

## சகல வாகனங்களும் இனிமேல் பதிவு செய்யப்பட வேண்டும்

யாழ்ப்பாணம், ஜன 7

பாவனையில் உள்ள சைக்கிள்கள் உட்பட சகல வாகனங்களும் இனிமேல் பதிவு செய்யப்படவேண்டும். இதற்காக விசேட அலுவலகங்கள் திறக்கப்படும். இந்த நடைமுறை எப்போது அமுலுக்கு வரும் என்பது குறித்து விடுதலைப் புலிகள் விரைவில் அறிவிப்பர்.

விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. பொற்கோ இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

நேற்று மாலை விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

வாகனப்பதிவு மற்றும் விடயங்கள் தொடர்பாக அவர் வெளியிட்ட மேலும் சில தகவல்கள் வருமாறு:-

● வாகனங்களை விற்பனை செய்யும் நிலைய உரிமையாளர்கள் தாம் விற்பனை செய்யும் வாகனத்துக்கு வழங்கும் பற்றுச்சீட்டில் வாகனம் கொள்வனவு செய்பவரின் குடும்ப

[3 ஆம் பக்சம் பார்க்க]

## ராணுவத்தின் குண்டே கோப்பாயில் வீசப்பட்டது!

யாழ்ப்பாணம், ஜன 7

கடந்த திங்கள் இரவு கோப்பாய் பகுதியில் பஜரோ வாகனம் மீது வீசப்பட்ட கிரனேட் யூகோஸ்லேவியாத் தயாரிப்பான 'எம் - 75' ரகத்தைச் சேர்ந்தது என அடையாளம் காணப்பட்டது தெரிந்ததே. இந்த கிரனேட்டை ஸ்ரீலங்கா இராணுவத்தினரே உடுதலாகப் பாவித்து வருகின்றனர்.

ஸ்ரீலங்கா இராணுவத்திடமிருந்து இந்தக் குண்டை தேச விரோத சக்திகள் பெற்று, அதனைப் பயன்படுத்தியிருக்கலாம்.

விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. பொற்கோ இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று கோண்டாவிலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இத்தகவலை அவர் வெளியிட்டார்

(3ஆம் பக்கம் பார்க்க)

## சந்தேக நபர்கள் பற்றி தகவல் தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 7

ஊருக்கு புதியவர்கள் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடுவோர் ஆகியோரை மக்கள் இனம் காணும் பட்சத்தில் அதுபற்றி அருகில் உள்ள இயக்க முகாமுக்கோ, காவல் துறை நிலையத்துக்கோ அல்லது இயக்க உறுப்பினர் என அடையாளம் காணுபவரிடமோ உடன் தகவல் தெரிவிக்க வேண்டும்.

அதன் மூலம் உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வீணான உயிராபத்துக்களை தவிர்க்கலாம்.

இப்படியான கோரிக்கையை விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. பொற்கோ நேற்று விடுத்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"கோப்பாயில் பஜரோ வாகனம் மீது குண்டு வீசிய

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தேச விரோதிகளுக்கு துணை போன பலர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 7

தமிழ்மக்களில் சகல மட்டத்தினரையும்—உயர் மட்ட அதிகாரிகளைக் கூட—தேச விரோதிகள் தமது நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பது விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. உயர் மட்டத்தில் தொடர்பு உடையவர்களும் தேச விரோதிகளுக்கு துணை போகிறார்கள்"

—இப்படி கூறுகிறார் விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. பொற்கோ.

நேற்று செய்தியாளர் மாநாட்டில் இத் தகவலை அவர் வெளியிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

தேச விரோதிகளுக்குத் துணை போன, உயர்மட்டத்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலித் தாக்குதலால் நிலைமை மோசமாகும்

### புலிகள் எச்சரிக்கை

மணிலா, ஜன. 7

கிளாலிக் கடல் பகுதியில் அப்பாவித் தமிழ் மக்களை ஸ்ரீலங்கா கடற்படையினர் படுகொலை செய்த சம்பவம் வடக்கு - கிழக்குப் பிரச்சினையை மேலும் தீவிரமாக்கும். இத்தகைய தாக்குதல்கள் கண்டிக்கப்படவேண்டியவையாகும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் லண்டன் செயலகம் விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அப்பாவித் தமிழ் மக்களை அரச படைகள் தாக்குவது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை மேலும் சிக்கலாக்கும்.

சமாதானக் கதவுகளை

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

3 பேஸ், 2 H.P., 3 H. P., 4 H. P. மோட்டர்கள் ஸ்பின்னிங் மெஷின் விற்பனைக்குண்டு நேரில் தொடர்பு கொள்ளவும். ஜவ்னா எலெக்றோ பிளேற்றேர்ஸ், இல. 7, கஸ்தூரியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(?3920)

வீடியோ கமரா, 180 டெக் N.V. 300 டெச், J.V.C. மிக்ஸர், ஸ்டில் கமராக்கள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. B.S போட்டோ, 40A, ராஜேந்திரா ரோட், குருநகர்.
(சி-4097)

### மலிவு விற்பனை

அழகிய கலண்டர்கள் பல நிறங்களில் விற்பனைக்கு உண்டு. வர்ணக் கலர்களில் பதிப்பித்தும், படங்கள் தனியாகவும் சிலிப் தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(23910)

### தவறிவிட்டது

கன்னையா இராசமயா ஆகிய நான் 02-01-93 இல் கிளாலியில் வைத்து எனது 537482180X இல அறிமுக அட்டையையும் வவுனியாவுக்கு அப்பால் செலவதற்கான பாஸ் அனுமதிச்சிட்டையும் தவறவிட்டுவிட்டேன். கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள குகன் ஸ்ரோரில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(23916)

582943346V இலக்க எனது அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். மனுவல் இறகரி யோகநாதன், கழாவடி, ஆனைக்கோட்டை மேற்கு.
(23945)

### மணமகள் தேவை

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தற்போது யாழ்ப்பாணத்தில் இருக்கும் பயிற்றப்பட்ட ஆசிரியர், வயது 31, 12இல் செவ்வாய், பூரம், இந்து, 15 - 01 - 93க்கு முன் முழுவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 477, மே பா உதயன். யாழ்ப்பாணம்.
(23907)

### ஒத்துமாறல்

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பௌதிக விஞ்ஞானத்திற்கு இவ்வாண்டு பதவு செய்தவர் யாழ் வளாகத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார். விரும்பியோர் தொடர்பு கொள்ளவும். 17, இந்த மகளிர் ஒழுங்கை யாழ்ப்பாணம்.
(23950)

### சங்கீதம் வினா-விடை

ஆண்டு 10, 11இல் சங்கீதம் கற்போருக்கும் வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கும் பயன்தரும் சங்கீதம் வினா-விடை விற்பனையாகின்றது. ஆக்கம்: செல்வி அநேகா, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(23903)

### வெளிவந்துவிட்டது

புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவோருக்குப் பயன் தரும் தமிழ் ஆண்டு-5 செயல்நூல் வெளிவந்துவிட்டது. விரிவான விளக்கங்கள் மாதிரி வினாத்தாள்கள் கொண்டது. ஆக்கம்: த. துரைசிங்கம், ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(23904)

## பாராட்டு

யாழ்ப்பாணம், ஜன. 7

கொக்குவில் ஐயனார் கோவில் ஆலயத்தின் வழிபடுவோர் சபையினர், காரைநகர் கம்பன் கழக அமைப்பாளரும் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியருமாகிய திரு. த. சிவகுமாரனுக்கு 'சொல் மொழி வேந்தன்' என்னும் பட்டமளித்து அவரைக் கௌரவித்தனர்.
(க)

## C.C.A
## கலை, வர்த்தக கல்லூரி

வெலிங்டன் சந்திக்கு அருகாமை)
யாழ்ப்பாணம்.

## A/L 93

பகல் நேர வகுப்புகள்

**DAY CLASSES**

பிரிவு III

பொருளியல்
திரு. உதயன்
கணக்கியல்
திரு. ஸ்ரீ
வர்த்தகம்
திரு. குகன்
அளவையியல்
திரு சயந்தன்
இந்து நாகரிகம்
திரு. ஜோதீஸ்வரன்
தமிழ்
திரு. தங்கராசா
புவியியல்
திரு. வேலாயுதபிள்ளை

ஆரம்பம்:
12 01 - 1993

★ வாரத்தில் செவ், வியா. சனி, ஞாயிறு நான்கு நாட்களும் வகுப்புகள் நடைபெறும.
★ பகல் நேர வகுப்பின் இறுதிப் பிரிவு
[சி-4155]

## துர்க்கா துரந்தரியாய் எக்காலமும் வாழ்க இனிது

ஆறுபத்து எட்டாண்டு அன்னையருட் துர்க்காவின் சீர்பெற்று ஓங்கிச் சிவத்தமிழில் தோர்வுற்றுத் துர்க்கா துரந்தரியாய் துன்புற்றார் வாழநின்றீர் எக்காலமும் வாழ்க இனிது.

இந்து மாமன்றம்.
யாழ். மத்திய கல்லூரி.
23947)

## நல்வாழ்த்துக்கள்

யாழ்ப்பாணத்தில் சமய, சமூக பணிகள் ஆற்றி இன்று தன் 68ஆவது பிறந்தநாள் காணும்
பண்டிதை
**தங்கம்மா அப்பாக்குட்டி (J. P)**
அவர்கள்
நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

இந்து வாலிபர் சங்கம்,
வட்டுக்கோட்டை.
(23937)

---

ஆரம்பமாகிவிட்டது

## A/L PHYSICS சங்கர்

உடன் நாடுங்கள்

## நியூ மற்ஸ் அக்கடமி

(வானவில் முன்பாக, யாழ். ஆரியகுளம் சந்தி)

* எளிமையான விரிவுரை
* தரமான கணக்குகள்
* சிறந்த பரீட்சை அணுகு முறை
* கடந்த கால வினா - விடை

நிறைந்த

★ MECHANICS ★

இயக்கவியல் — சனி, ஞாயிறு 7 - 8 a.m
நிலையியல் — சனி, ஞாயிறு 8 9 a.m

★ **HEAT** - செவ். — வியா. 4 - 5 p.m
★ **ELECTRICITY** - செவ. — வியா. 5 6 p.m

★ தனிப்பட்ட முறையில் பௌதிகம் கற்க விரும்புகிறவர்களும் தொடர்பு கொள்ளவும்.
[சி-4162]

வருடம் வருடம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தரும் அனுபவமிக்க வழமையான ஆசிரியர் குழு

## O/L DEC. 1993

| | |
|---|---|
| ✶ கணிதம் | ✶ விஞ்ஞானம் |
| ✶ தமிழ் | ✶ சமூகக்கல்வி |
| ✶ ஆங்கிலம் | ✶ சமயம் |
| ✶ வர்த்தகம் | ✶ விவசாயம் |
| ✶ மனைப்பொருளியல் | ✶ சித்திரம் |
| ✶ சங்கீதம் | ✶ நடனம் |

ஆகிய பாடங்களுக்கான வகுப்புகளுடன்

**4, 5, 6, 7, 8, 9, 10 ஆம்**
ஆண்டுகளுக்கான வகுப்புகளும்

புதிய பிரிவுகள்:

ஆரம்பம்: 09 - 01 - 1993

## BOND Institutes

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஒவ்வொரு மாணவரினதும் Progress Report குறித்த மாதத்தில் நான்காம் திங்கட்கிழமைகளில் தபாலில் பெற்றோரின் கவனத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
(சி-1099)

## அங்லோ ஏசியன் பேர்டிலைசேர்ஸ் கம்பனி வழங்கும் ...

## 'நியூட்றா பொஸ் சுப்பர் கே'
## NUTRA PHOS SUPER K

1) நெற்பயிர்களில், விளைவை 30 வீதம் வரை அதிகரிக்க குடலைபருவத்திலும், பூக்கும் பருவத்திலும், பால் பருவம் ஆரம்பிக்கும்போதும் நியூட்றா பொஸ் சுப்பர் கே தெளிக்கவும்.
2) கத்தரி, கோவா, உருளைக்கிழங்கு, மிளகாய் மற்றும் மரக்கறிப் பயிர்களில் விளைவை பன்மடங்கு அதிகரிக்க, பயிர்கள் பூக்க ஆரம்பிக்கும் காலத்திலிருந்து 14 நாட்கள் இடைவெளியில் நியூட்றா பொஸ் சுப்பர் கே தெளிக்கவும்.

பீடை நாசனிகள் விற்பனையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.
(சி/2870)

### அறிவித்தல்

வெள்ளி 08-01-93 வகுப்புக்கள் நடைபெறாது. 0 -01-93 சனி வழமை போல் வகுப்புக்கள் நடைபெறும்

இயக்குனர்,
புதிய
உயர் கல்லூரி,
[illegible]
(சி-4 61)

---

## 'குமணா' கப்பல் மூலம் மா அனுப்புமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன 7

'குமணா' கப்பல் மூலம் திருகோண மலையிலிருந்து மூவாயிரம் மெற்றிக் தொன் மாவை உடனடியாக அனுப்பி வைக்குமாறு யாழ். மசெயலக புனர்வாழ்வுப் பிரிவு, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு அவசர செய்தி ஒன்றை அனுப்பியுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து
(3 ஆம் பக்கம் பார்க்க)

சிவத்தமிழ்ச் செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி J. P.**
அவர்களின்

## 68-வது பிறந்ததின வாழ்த்து

### தெல்லிப்பழை அம்மாவே வாழ்க!

தொல்லை துயர் சூழ்ந்து
தொல்லறங்கள் அழிந்தாலும்
பிள்ளைகுட்டி பிணியாளரென்ற
பேதங்கள் மறைந்தாலும்
கொள்ளை கொ(ல்)ள்ளு(லு)ம்
ஹெலி, பொம்மராட்சி
எல்லையின்றி நீண்டாலும்
ஈழத்தில் எண்ணிடும் சேவைகள் காக்கும்
தெல்லிப்பளை அம்மாவே
சீர்பல பெற்று வாழ்க!

(ஆக்கம்: கவிஞர் காரைநகர் எம். பி. அருளானந்தன்)

பாடசாலை அபிவிருத்திச் சபை,
வட்டு. திருஞானசம்பந்தர் வித்தியாசாலை,
வட்டுக்கோட்டை.
[23952]

சைவ வித்தியா விருத்திச் சங்கம்

## பொதுமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்

17-01-1993க்கு முன் சுயவிவரங்களைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு விரும்புவோர், பதிவுத் தபாலில் விண்ணப்பிக்கவும்

கௌரவ செயலாளர்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
(சி-4101)

விநாயகர் விளையாட்டுக் கழக
ஆதரவில்
11 பேர் கொண்ட

## மாபெரும் காட்சி உதைபந்தாட்டம்

இடம்: ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டரங்கு (R. D. S.) மல்லாகம்
காலம்: 08 — 01 — 1993 வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணி

★ யங்றோயல் (காங்கேசன்துறை) எதிர் ஞானகலா (மயிலங்காடு)
★ சென். மேரீஸ் (நாவாந்துறை) எதிர் றோயல் (ஊரெழு)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

- விநாயகர் விளையாட்டுக் கழகத்தினர்.

அளவெட்டி வடக்கு.
(23951)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

நடத்தும்

## முழுநிலா நாள் அறிவியலரங்கு

1993-01-08 வெள்ளி மாலை 3-00 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில்

விடயம்:
" மூன்றாம் கட்ட உலக மயமாக்கல் "
திரு. முத்தையா திருநாவுக்கரசு

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்
ப. மா. சங்கம்,
யா இ. க.
[சி/4103]

## நாவலர் கல்விக் கழகம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**புதிய பிரிவு ஆரம்பம்: 07-01-93**
[ இன்று மாலை 3-00 மணி ]

**ஆண்டு 1 முதல் O/L வரை**
சகல பாடங்களும்.
[23980]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஏகோபித்த குரலாக அமைய வேண்டும்

அரசாங்கம் தமிழ் மக்களுக்கு இழைக்கும் அநீதிகளைக் கண்டித்தும், அவற்றை நீக்கக் கோரியும் எதிர்வரும் திங்கட்கிழமை வெகுசனப் பேரணி ஒன்று யாழ். நகரில் நடைபெறவுள்ளது. இந்தப் பேரணியை நடத்துவதற்கு ஒழுங்குகளைச் செய்துள்ள தமிழீழ வெகுசன அமைப்புகளின் ஒன்றியம் இப்பேரணியை தமிழ் மக்களின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறும் சாதனமாக்குவதற்கும் வகை செய்துள்ளது.

★ தமிழர்களுக்கு எதிராகக் கடந்த 32 மாத காலமாக விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும்

★ மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உறைவிடம், சுகாதாரம், கல்வி போன்றவற்றுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைத் தங்கு தடையின்றி அனுப்பவேண்டும்.

★ பூநகரியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை அகற்றி குடாநாட்டுக்கான போக்குவரத்துப் பாதையைத் திறக்கவேண்டும்.

★ கருத்தில்லாத— அர்த்தமற்ற— யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்.

இந்த நான்கு கோரிக்கைகளும் குடாநாட்டு மக்களின் இன்றைய நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கப் போதுமானவை யாகும்.

பேரணியையும் விட சக்தி வாய்ந்த சாத்வீகப் போராட்டங்களை நடத்தியவர்கள் ஈழத் தமிழர்கள். ஆனால் சாத்வீகத்துக்கும், நாகரிகச் செயற்பாடுகளுக்கும் மதிப்பளிக்காத சிங்கள அரசுகள் அவை குறித்துக் கவனத்தில் எடுத்ததில்லை.

ஆகையால் திங்கட்கிழமை நடக்கும் பேரணியைப் பொருட்படுத்தி தமிழ் மக்களின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. எனினும் தமிழ் மக்கள் தமது கஷ்டங்களை வெளிக்கொணர்ந்து தமது நிலைப்பாட்டை வெளிப்படையாகவும், பகிரங்கமாகவும் தெரிவிப்பதற்கு வெகுசன போராட்டம் பெரிதும் உதவும் தமிழ் மக்களின் கஷ்டங்களையும், விருப்பங்களையும் வெளி உலகத்துக்கு நேரடியாக எடுத்துச் சொல்லும் சாதனமாகவும் வெகுசனப் போராட்டங்கள் அமையும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் மக்களின் நாளாந்த வாழ்க்கையைப் பாதிக்கும் உடனடிப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்டதே முதல் மூன்று கோரிக்கைகளாகும். நான்காவது இப்பிரச்சினைகளுக்கு காலாக அமைந்த யுத்தத்தை நிறுத்தக் கோருவது.

யுத்தத்தில் வெற்றி கொள்வதற்கான பிரதான உத்திகளில் ஒன்றே அரசின் பொருளாதாரத் தடை, ஆனால் யுத்தத்தில் வெற்றி காணமுடியாது எனற தள நிலைமை உறுதியாகிவிட்டது மீண்டும் ஒரு முறை முயற்சித்துப் பார்த்தால் என்ன என்று இராணுவம் கருதுகிறது. கடந்த இரண்டரை வருடங்களாக படைகளுக்குச் சந்தர்ப்பம், வசதிகள் கொடுத்தும் இயலவில்லை. ஆயின் இனிமேல் வெற்றி எப்படிச் சாத்தியமாகும் என்று தெற்கு மக்கள் கேட்கத் தொடங்கி விட்டனர். இத்தகைய பின்னணியில் இரண்டும் கெட்டான் நிலையில் நின்று அரசு திண்டாடுகிறது

போரை நிறுத்துவதும், பொருளாதாரத் தடைகளை நீக்குவதும் உடனடியாகச் செய்யப்பட வேண்டியவை என்று தமிழ் மக்கள் கருதுகிறார்கள் என்ற அவர்களின் நேரடியான தகவல் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்காவிடினும் சிங்கள மக்களினதும், சர்வதேசங்களினதும கவனத்தை ஈர்க்காமல் இருக்கமுடியாது தமிழர்களின் ஊர்ஜிதப்படுத்தப்பட்ட நிலைப்பாடாக அவர்கள் கருதவும் வகை செய்யும்.

எனவே திங்களன்று நடக்கும் வெகுசனப் பேரணியில் குடாநாட்டில் வாழும் ஒவ்வொருவரும் கலந்து கொண்டு ஏகோபித்த குரலை வெளிக்காட்டுவது அவசியமாகும்.

## இன்று

உடுவில் ஜன 7

காரைநகர் மணிவாசகர் சபையால் நடத்தப்பட்ட சைவசமய பாடப் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்த மாணவர்களுக்கு இன்று வழக்கம்பட்டறை முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் நடைபெறும் மணிவாசகர் விழாவில் வைத்து பரிசில்கள் வழங்கப்படும். (க-152)

## உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன. 7

சரசாலை இலந்தைத் திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை அதிகாலை 4.30 மணியிலிருந்து திருவாசகமுற்றோதல் நிகழும் (க)

o o o

தெல்லிப்பளை, ஜன. 7

சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலயத்தில் இன்று காலை ரதோற்சவமும் நாளை அருத்ரா தரிசனமும் இடம்பெறும். (உ-68)

o o o

யாழ்ப்பாணம், ஜன 7

கோண்டாவில் மேற்கு அருள்மிகு செங்கற்பனை புவனேஸ்வரி அம்பாள் உடனுறை அதிதீஸ்வரர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ரதோற்சவ விழா நடைபெறும. இன்று இரவு 2 மணிக்கு விசேட அபிஷேகமும், வெள்ளிக்கிழமை அதிகாலையில் ஆருத்ரா தரிசனமும் இடம்பெறவுள்ளது

o o o

யாழ்ப்பாணம், ஜன. 7

உரும்பராய் ஒடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணிக்கு ஆருத்ரா தரிசனம் நிகழும். இதையடுத்து திருவெம்பாவை ஓதப்பெற்று விநாயகப் பெருமானும், நடேசப் பெருமானும் வீதி உலா வந்து பக்தர்களுக்குக் காட்சி கொடுப்பார். (உ)

o o o

நவாலி, ஜன 7

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய திருவெம்பாவை ரதோற்சவம் இன்று வியாழன் பகல் 10 மணியளவில் நடைபெறும் (உ-100)

o o o

கொக்குவில், ஜன 7

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதி விநாயகர் ஆலயத்தில் இன்று மாலை 7 மணியளவில் நடேசர் திருஊஞ்சல் நிகழ்ச்சியும் வெள்ளி அதிகாலை ஆருத்ர தரிசனமும் இடம்பெறும். (உ-69)

## நாளை

நெல்லியடி, ஜன. 7

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம கலை, பண்பாட்டுப் பேரவை பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்தும் வாராந்த நிகழ்ச்சியில் நாளை 'விக்கிரக வழிபாடு' என்னும் பொருள் பற்றி பண்டிதர் சைவப் புலவர் சிவஸ்ரீ கை. நமசிவாயக் குருக்கள் சொற்பொழிவாற்றுவார்.

இந்நிகழ்ச்சி தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் (க-109)

o o o

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடப் பரிபாலன சபை பூரணை தினந்தோறும் நடத்தி வரும் சொற்பொழிவுத் தொடரில் நாளை ''புண் சுமந்த பொன்மேனி'' என்ற தலைப்பில் திரு க சிவராமலிங்கம் உரையாற்றுவார் கந்தர்மடம் குமாரசுவாமி வீதியில் உள்ள வேதாந்த மடத்தில் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு இந்த நிகழ்ச்சி நடைபெறும். [உ]

o o o

யாழ்ப்பாணம், ஜன. 7

போஷாக்கின்மை தொடர்பான சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று நாளை காலை 9 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பிராந்திய மருத்தக மண்டபத்தில் நடைபெறும்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் அநுசரணையுடன் நடைபெறும் இக்கருத்தரங்கில் ''இரத்தச் சோகையும் அதனைத் தடுக்கும் முறைகளும்'' என்ற தலைப்பில் யாழ். மருத்துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ். சிவராசா கருத்துரை வழங்குவார். [உ-18]

### காயமுற்ற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ தியாகராஜா தியாகினி (வயது 19 — காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்தவர்.

★ தியாகினியின் சகோதரி தியாகராஜா சுபாஜினி (வயது 15)

★ சுப்பிரமணியம் சதாசிவம் (வயது 55) — புங்குடுதீவிலிருந்து இடம்பெயர்ந்தவர்.

★ அரியரத்தினம் பூமணி (வயது 66) — தெல்லிப்பளை வீமன்காமத்தில் இருந்து இடப்பெயர்ந்தவர்.

★ கோதண்டபாணி சுதாகரன் (வயது 13) — பெரியவிளானிலிருந்து இடம்பெயர்ந்து மாவிட்டபுரயில் வசிப்பவர் இவரும் படுகாயமடைந்துள்ளார்.

ஆறுமுகம் சரவணபவானந்தன் (வயது 40) — காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்தவர்.

★ பொன்னம்பலம் சிவசாமி (வயது 50) — சித்தன் கேணி.

★ இலட்சுமணன் நடராசா (வயது 70) — சித்தன் கேணி

★ நாகேஸ்வரி (வயது 10) — சித்தன்கேணி

★ சுரேஷ் வயது 16) — சித்தனகேணி.

★ பிரதீப் (வயது 6 .

இந்தப் பதினான்கு பேரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

காலில் காயமடைந்த சி. சிவஞானம் (வயது 76 — சித்தன்கேணி) சங்கானை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-3-15)

### சித்தன்கேணியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னங்கள் நாலாபுறமும் பரவி மக்களைத் தாக்கிய தாகத் தெரிவிக்கப்பட்டது

இத்தாக்குதலில் உயிரிழந்த ஒன்பது பேரில் ஒருவரின் உடல் சிதறிப் போனது. மற்றைய எட்டுப் பேரில் பலரின் அங்கங்கள் சிதறிப் போயின; பதினைந்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்; பத்துக்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்தன.

திடீர் தாக்குதலினால் நிலை குலைந்த அப்பகுதி பொது மக்கள் தாங்கள் நின்ற இடங்களிலேயே விழுந்து குப்புறப் படுத்தனர்.

றொக்கட் ஷெல்கள் விழுந்து வெடித்த இடத்திலிருந்த பலர் காயமுற்றனர் அல்லது உயிரிழந்தனர். அப்பகுதியில் வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பலரும் காயமடைந்தனர்; முரளி அரிசி ஆலையில் வேலை செய்து கொண்டிருந்த சிலரும் பாதிப்புற்றனர்.

றொக்கட் தாக்குதலுக்கு இலக்கான வீதிப் பகுதியில் குழிகள் காணப்படுகின்றன; அப்பகுதியில் பல கால்நடைகளும் உயிரிழந்துள்ளன; பயன் தருமரங்கள் முறிந்து விழுந்தன.

விமானத் தாக்குதல்களுக்கு இலக்கான பகுதியில் நேற்று மாலை வரையும் இரத்த வாடை வீசிக் கொண்டிருந்தது.

அப்பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் பெரும் பதற்றமடைந்து கூக்குரலிட்ட வண்ணம் பாடசாலைகளில் இருந்து அங்குமிங்குமாய் ஓடினர். (உ-3-5-12-15-28-45-68-162-175)

### விமானக்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிருந்த வீடும் சேதமடைந்தது

★ கந்தையா பிரேமதாஸ் [வயது 19] — காங்கேசன் துறையிலிருந்து இடம்பெயர்ந்தவர்.

★ சுப்பிரமணியம் சிவநாதன் [வயது 48] — தெல்லிப்பழையில் இருந்து இடம் பெயர்ந்தவர்.

★ சின்னத்தம்பி அன்னப்பிள்ளை [வயது 55] — காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்தவர்.

★ எ. இலட்சுமிப்பிள்ளை [வயது 70] — சித்தன்கேணியைச் சேர்ந்தவர்.

★ செல்லையா கௌரிபாலன் [வயது 21] — சித்தன் கேணியைச் சேர்ந்தவர்.

★ கோதண்டபாணி உதயகுமார் [வயது 23] — பெரிய விளானிலிருந்து இடம்பெயர்ந்தவர். இவரின் சகோதரர் சுதாகரன் [வயது 18] இச்சம்பவத்தில் காயமுற்றார். [உ-3-15-175]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம் வேலணைக் கோட்டப் பாடசாலை ஆங்கிலப் பாட இணைப்பாளர்களுக்கான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், மருதனார்மடக் கோட்டப் பாடசாலைகளின் ஆங்கிலப் பாட இணைப்பாளர்களுக்கான கருத்தரங்கு 9 ஆம் திகதி சனிக்கிழமை இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும். (க-152)

### அங்கிலிக்கன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயர் யாழ். வர அனுமதி மறுக்கப்பட்டுள்ளபோதிலும்—

அவரின் யாழ். விஜயத்தை யொட்டிய நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் திட்டமிட்டபடி இங்கு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், அவரை இங்கு வரவேற்க சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாகவும கொழும்புக்கு நேற்றுத் தகவல் அனுப்பப்பட்டதாக யாழ். அங்கிலிக்கன் திருச்சபை வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

### கிளாலித்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் திறந்து வைத்துள்ளனர். இத்தகைய மிருகத்தனமான தாக்குதல்கள் சமாதானக் கதவுகளை மூடுவதற்கே வழி செய்யும் —இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ட-5-6)

### சந்தேக ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேக நபர் அப்பகுதியில் நான்கு நாட்கள் திரிந்துள்ளதை அந்தப் பகுதி மக்கள் கண்டுள்ளனர் ஊருக்கு அவர் புதியவர் என்பதை மக்கள் அவதானித்திருந்தும் அது பற்றி உடனடியாக முகாமுக்கு தகவல் தெரிவிக்க அவர்கள் தவறிவிட்டனர்.

மக்கள் விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் இருந்து உடன் தகவல்களை எமக்குத் தந்தால் வீணான உயிராபத்துக்களை தவிர்க்க முடியும். அத்துடன் தமிழீழத்தில் தேசவிரோதச் செயல்கள் இடம் பெறாமலும் தடுக்கலாம்''— என்றார் அவர்.

### ராணுவம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அண்மைக் காலத்தில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட ஆறாவது நடவடிக்கை இது என்றும் அவர் சொன்னார்.

ஓமந்தை மாணிக்கவளவு, யாழ். பிரதான பஸ்நிலையம், யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதி, யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானம், கொம்படி ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தேசவிரோத சக்தியின் வேலையே என்று அவர் குறிப்பிட்டார்.

இவற்றில், கொம்படியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் மட்டும் பொது மக்கள் உயிரிழந்தனர். (உ-3)

### யாழ் புனர்வாழ்வு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புனர்வாழ்வுத் திட்டம் கொழும்புக்கு அனுப்பப்படடிருந்தது

அந்தத் திட்டத்துக்கே 11 கோடி 30 லட்சம் ரூபாவை வழங்க ஜேர்மன் அரசு தற்போது இணங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 'குமண'...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி

புறப்பட்ட 'குமண' கப்பல் தற்சமயம் திருகோணமலையில் பொருள்களை இறக்கிவிட்டுத் தங்கிநிற்பதாகவும்—

அத்தக் கப்பலை பயன்படுத்தி மாவினை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டிருப்பதாகவும் செயலக புனர்வாழ்வு பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன. (ம.-5)

### பாடசாலையில். .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

தாக்குதலில் உயிரிழந்தனர் எனினும் மண்டபத்திலிருந்த பிள்ளைகள் காயம் ஏதுமின்றித் தப்பினர்.

இதே மண்டபத்தில் மாதகலில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மூன்று குடும்பங்களும் தங்கியிருந்தன. எனினும் அக்குடும்பங்களும தெய்வாதீனமாக காயம் ஏதுமின்றித் தப்பின. [உ-3-175]

# இலங்கை நிலைமை குறித்து ஜனாதிபதி புஷ் கவலை

வடக்கிலும் கிழக்கிலும் நடைபெறும் யுத்தத்தினால் இலங்கையர்கள் தமது முழுமையான ஆற்றலை, மூலவளங்களைப் பயன்படுத்த முடியாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானதாகும.

— அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இவ்வாறு கவலை வெளியிட்டார்.

அமெரிக்காவுக்கான புதிய இலங்கைதூதர் ஆனந்தகுருகே தமது நியமனப் பத்திரத்தை வாஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதியிடம் அண்மையில் கையளித்தார் அது தொடர்பான நிகழ்ச்சியில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி புஷ் இவ்வாறு குறிப்பிட்டார். (உ-க-3)

# பாதுகாப்புக்காக வயலில் விழுந்து படுத்த அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஜன. 7

சித்தன்கேணிப் பகுதியில் நேற்று விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் இடம் பெற்ற வேளை—

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்த யாழ். மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு. து வைத்திலிங்கம் மற்றும் அப்பகுதி கிராமசேவையாளர்கள், அலுவலக ஊழியர்கள் உடனே அலுவலகத்தை விட்டு வெளியே ஓடிவந்து பணிமனைக்கு முன்னால் உள்ள வயலுக்குள் விழுந்து குப்புறப் படுத்தனர்.

எனினும் பணிமனைப் பகுதியில் விமானத் தாக்குதலினால் அனர்த்தம் ஏதும் ஏற்படவில்லை. (உ-175)

# டாக்கா வந்திறங்கியதும் ராவை முற்றுகையிட முடிவு

டாக்கா, ஜன. 7

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இம்மாதம் 12 ஆம் திகதி டாக்கா விமான நிலையத்தில் வந்து இறங்கும்போது, விமான நிலையத்தை முற்றுகையிடப்போவதாக பங்களாதேஷில் உள்ள முஸ்லிம் அடிப்படைத் தீவிரவாதிகள் அமைப்பு அறிவித்துள்ளது

நரசிம்மராவ் டாக்கா வருவதற்கு முன்பு, அயோத்தியில் இடிக்கப்பட்ட பாபரி மசூதியை மீண்டும் அதே இடத்தில் கட்டத் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாபரி மசூதியைக் கட்டும் வேலைகளை ஆரம்பிக்காமல் டாக்காவுக்கு நரசிம்மராவ் வருவாரானால், அவர் வந்திறங்கும் விமான நிலையத்தை தமது தொண்டர்கள் முற்றுகையிடுவார்கள் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## மீட்பு நிதி

யாழ்ப்பாணம், ஜன. 7

இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறிய வசதி படைத்தோர் — சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தோர் — தமது மீட்பு நிதிக் கடனை இன்று பிற்பகல் 3 மணி முதல் 3.30 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் செலுத்தலாம் என தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (உ-3)

## ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், ஜன. 7

பலாலி முகாம் பகுதியிலிருந்து நேற்றிரவு 8 மணியளவில் ஏவப்பட்ட ஷெல்கள் பண்டத்தரிப்பு, பனிப்புலம், சில்லாலை, சுழிபுரம் பகுதிகளில் விழுந்து வெடித்ததாகத் தெரியவருகிறது இதனால் இப்பகுதிகளைச் சேர்ந்த ஒரு பகுதி மக்கள் நேற்றிரவு இடம்பெயர்ந்தனர். (உ-15)

## இன்றைய உதைபந்தாட்டம்

அமரர் ஈ.கே குமரையா ஞாபகார்த்தமாக அரியாலை ஐக்கிய கழகம் நடாத்தும் — ஒன்பது பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டங்கள் இன்று மாலை நடைபெறவிருக்கின்றன.

பிற்பகல் 2 45 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது ஆட்டத்தில் சென்றோக் விக அணியை எதிர்த்து சென். அன்ரனீஸ் வி க. அணி மோதும். அடுத்த அரையிறுதியாட்டத்தில் நடும்மீன் விக அணியை எதிர்த்து அரியாலை அணி மோதும். (உ)

### சகல வாகனங்களும்...

[ஆம் பக்கத் தொடர்ச்சி]

அட்டை இலக்கத்தை கட்டாயம் பதிவுசெய்ய வேண்டும் கொள்வனவு செய்பவரின் குடும்ப அட்டையை நேரடியாகப் பார்வையிட்டே இலக்கம் பதியவேண்டும்.

● பொதுமக்கள் தமது வாகனம் எதையும் யாருக்காவது விற்பதானால், தமது குடும்ப அட்டை இலக்கத்தையும் வாகனத்தைக் கொள்வனவு செய்பவரின் குடும்ப அட்டை இலக்கத்தையும் தாம் வழங்கும் உறுதிக் கடிதத்தில் கட்டாயம் பதியவேண்டும் — என்றார். (உ-3)

## திருவாசக விழா நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ். வண்ணை வைத்தீஸ்வரசுவாமி கோவிலில் நடைபெற்ற திருவாசகப் பெருவிழாவின் இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்றைய தினம் இடம்பெறவில்லை.

இந்த நிகழ்ச்சிகள் இன்று வியாழன் காலை 9 மணிக்கு நடைபெறும் என்று அறியப்பட்டது. (ஓ-11)

## பாட நூல்கள் வாபஸ்

யாழ்ப்பாணம், ஜன. 7

ஐந்தாம் ஆண்டு வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட — தமிழ்ப் பாடத்துக்குரிய — இலவச பாடநூல்கள் அனைத்தையும் வாபஸ் பெற முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான பணிப்புரையை கல்விச் சேவைகள் அமைச்சர் சுனேத்ரா ரணசிங்க, வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பியுள்ளார்.

முஸ்லிம் கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அஸ்வரின் முறைப்பாட்டை அடுத்தே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டது [உ-3]

### தேசவிரோதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புகள் உடையவர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் அவர்களில் சிலரின் விவரம் வருமாறு:-

★ படைவீரசிங்கம் கதிரவேலு (வயது 46)—இ போ.ச அலுவலர், சிரேஷ்டசாலைப் பரிசோதகர்; கொக்குவில் கிழக்கு.

★ வல்லிபுரம் சந்திரசேகரம் என அழைக்கப்படும் சந்திரன் (வயது 32)—வியாபாரி; புதுக்குடியிருப்பு 17 ஆம் கட்டையைச் சேர்ந்தவர்

★ சின்னத்துரை சிறீதரன் (வயது 39)-இ.போ.ச. சாலை பரிசோதகர். பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.

★ நடராசா (வயது 38— வியாபாரி புதுக்குடியிருப்பு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்

★ வைரமுத்து சிவபாதம் (வயது 40 —வியாபாரி; கோப்பாய் தெற்கைச் சேர்ந்தவர்.

உயர் மட்டத்தில் உள்ள இவர்கள். தேசவிரோதிகளுக்கு துணைபோனமைக்கு சான்றாக உள்ளனர். இவர்கள் போன்ற உயர் மட்டத்தவர்கள் குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.— என்றார் அவர். (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலாம்பாள் இராஜதுரை

காரைநகர் நடுத்தெருவைச் சேர்ந்தவரும், கேணியடி சங்கரத்தையில் வசித்தவருமான திருமதி கமலாம்பாள் இராஜதுரை 6 1.93 இல் அகால மரணமானார். அன்னார் கந்தப்பு இராஜதுரையின் அன்பு மனைவியும், சுகிர்தமாலா, ரஜீவ்குமார், சுஷ்ஜெயந்தியின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று காலை 10.00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. இராஜதுரை
(கணவன்)

சபாபதிப்பிள்ளை அருளானந்தம்,
கேணியடி,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(23959)

## கனகசபை ஐயாத்துரை

திருநெல்வேலி கேணியடியை பிறப்பிடமாகக் கொண்ட கனகசபை ஐயாத்துரை காலமாகி விட்டார். அன்னார் மனோன்மணியின் (பரிமளம்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற லீலாவதி, பரஞ்சோதி கோண்டாவில், கனகலிங்கம் கோண்டாவில், ஞானேஸ்வரன், மோகனதாஸ், கிருபாகரன், பாலச்சந்திரன், நந்தினி, சுகுமார், பாலகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னுத்துரை, குணவதி, வசந்தா, புஸ்பராணி, ரதினா, கருணானந்தன் ஆகியோரின் மாமனாரும், நடராஜா, காலஞ்சென்ற சின்னத்துரை, இராசம்மா, காலஞ்சென்ற இரத்தினம் ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று [07-01-93] வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக திருநெல்வேலி செம்பாட்டு மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(மகன்) பரஞ்சோதி

கேணியடி,
திருநெல்வேலி.

(23955)

## செல்வி முத்தையா சந்திரலீலா

ஏழாலை மத்தி ஏழாலையைச் சேர்ந்த செல்வி முத்தையா சந்திரலீலா 2-1-93 சனிக்கிழமை கிளாலியில் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற முத்தையா - திருமதி கண்மணி முத்தையாவினதும் அன்பு மகளும், ரஞ்சிதமலர், தங்கசிவம், புஸ்பராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. ஆறுமுகசாமி, தர்மினி, வசந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரமளா, பிரிந்தா, பிரகலா, பிரணவன், பிரசாந் ஆகியோரின் சிறிய தாயாரும், காண்டீபன், ஜனார்த்தனன், தர்சிகன், கௌதமன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 5-1-93 (செவ்வாய்க்கிழமை) அன்று ஏழாலையில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை உசந்தியோடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு மிகவும் ஆழ்ந்த கவலையுடன் தெரிவிக்கின்றோம்

தகவல் :
மு கண்மணி
(தாயார்)

ஏழாலை.
(5478)

## செல்லையா கௌரிபாகன்

செல்லையா கௌரிபாகன் (6 - 1 - 93) அகால மரணமடைந்தார்.

அன்னார் நிரஞ்சனாவின் அன்புக் கணவரும், சுரேக்காவின் அன்புத் தந்தையும், இ. செல்லையா (இளைப்பாறிய ஆசிரியர்), திருமதி பாக்கியலட்சுமி செல்லையா (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் புதல்வனும், நந்தகுமார், சித்திரா, சுமித்திரா, சந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி கலாநாயகி நந்தகுமார், கலச்சந்திரன் (U. K.), செல்வமணி (U K ) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் டச் வீதி சித்தன் கேணியில் உள்ள அவரது இல்லத்தில் 7 - 1 - 93 காலை 8. 00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் எற்றுக் கொள்ளவும்.

இ. செல்லையா
(தந்தை)

டச் றோட்,
சித்தன்கேணி,

(2396')

## ஏகாம்பரம் இரத்தினசபாபதி

(இளைப்பாறிய ஆசிரியர்,
வெலிமடை தமிழ் மகா வித்தியாலயம்
மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம்)

வேலணை மேற்கைச் சேர்ந்தவரும், மானிப்பாயில் வசித்து வந்தவருமாகிய ஏகாம்பரம் இரத்தினசபாபதி 4-1-93 திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் கமலதேவி (ஆசிரியை மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் திருமதி ஞா. சிறிகாந்தா (ஞானி) (ஆசிரியை யாழ். இந்து மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற பரிபூரணன் (அமுதன்) (பொறியியலாளர்), இளம்பூரணன் (வரதன்) (பொறியியாளர் இங்கிலாந்து), ஞானபூரணம் (குகன் நோர்வே), சிவபூரணன் (சிவா) (கட்டுப்பெத்த வளாகம்), ஞானகலா (ஞானா) (கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி), ஞானாம்பிகா (அம்பிகா) (கட்டுப்பெத்த வளாகம்) ஆகியோரின் தகப்பனாரும் சிறிகாந்தா (ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி), வனஜா (இங்கிலாந்து) ஆகியோரின் மாமனாரும், சுமித்திரா, நிரோசா, பிபீசன் ஆகியோரின் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று (7-1-93) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்' இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சிறிகாந்தா

29, மேதர் லேன்,
மானிப்பாய்.

(23964)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்: 05 — 10 — 1927



மறைவு: 08 — 12 — 1992

அமரர்

## பொன்னம்பலம் நடராசா

(புங்குடுதீவு 7ஆம் வட்டாரம் - நீர்கொழும்பு பிரபல வர்த்தகர்)

**07 – 01 – 1993**

அன்பின் தெய்வமே! நாம் வாழ வழி காட்டிய அன்பின் சிகரமே! எம்மை நல்வழி நடத்திய பண்பின் உறைவிடமே! கலங்கரை விளக்காய் ஒளி தந்து வாழ வைத்த குடும்பத்தின் குல விளக்கே! ஐயாவே உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இறுதிக்கிரியையில் கலந்து கொண்ட அனைவரையும் இன்று 07 01-1993 எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியையிலும், அந்தியேட்டிக் கிரியையிலும் கலந்து கொண்டு பலவழிகளிலும் எமக்கு உதவிகள் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


ந. கோகுலதாசன்,
15/1, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(23953)

# முதலாம் வருட நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 18 — 11 — 1966

ஆண்டவன் அடியில்: 07 — 01 — 1992



## கந்தலிங்கம் சதீஸ்குமார்

(மண்டைதீவு)
(4ஆம் வருட மருத்துவபீட மாணவன், யாழ் பல்கலைக்கழகம்)

மாண்டார் போற்றும் மாண்புறு மருத்துவ
காண்டம் படித்த சதீஸே! உன்னை
ஆண்டவன் பறித்துமே ஆண்டொன்று ஆய்ச்சு
மீண்டொரு பிறப்பு மேதினி மீதினில்
ஆண்டவன் அருளின் அன்புடன் நாமுமைத்
தீண்டொரு பாக்கியம் பெற்றவர் ஆவோம்
ஈண்டுறு உறவினர் இடருறு கின்றார்
தீண்டிடும் அடிலால் உருகிடும் மெழுகென
ஈண்டுளோர் யாவரும் இடருறக் கண்ணீர்
தோண்டிடும் கிணற்றின் ஊற்றெனப் பாய
ஆண்டவன் தாளைப் பணிந்து தினமும்
வேண்டுவோம் உந்தன் ஆத்மாவின் சாந்தி!

பாசமுள்ள;
அப்பா, அம்மா, அக்கா, அத்தான்,
அண்ணாமார், அண்ணி, மாமா
மாமிமார் குடும்பம், சித்திமார் குடும்பம்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

23, யாழ். வீதி,
யாழ்ப்பாணம்.

(23926)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் காவலர் வீதி, 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07-01-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி மகேஸ்வரி தில்லையம்பலம்
## செல்வி நளினி தில்லையம்பலம்

02 - 01 - 93 அன்று கிளாலிக் கடலில் கொடியவரின் சூட்டுக்கு இரையாகி கடலில் சங்கமமாகிய எமது பாடசாலை ஆசிரியை செல்வி நளினி தில்லையம்பலத்திற்கும், அவர் அன்னை திருமதி மகேஸ்வரி தில்லையம்பலத்திற்கும், எமது இதயங் கலந்த கண்ணீர் அஞ்சலிகள் எம்முடன் சிலகாலம் ஒன்றிணைந்து கல்விப் பணியாற்றிய ஆசிரியையின் இழப்பு ஈடுசெய்யமுடியாத ஒன்றாகும். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுவதுடன் அவர் பிரிவால் வாடும் அன்னாரின் குடும்பத்தாருக்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
யா/கொக்குவில் நாமகள் வித்தியாலயம்

(23961)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுகிர்தமலர் மயில்வாகனம்

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி சுகிர்தமலர் மயில்வாகனம் கடந்த சனிக்கிழமை 02-01-93 அன்று கொழும்பில் சிவபதம் அடைந்தார்.

இவர் திரு. க. மயில்வாகனம் (Engineer, நீர்ப்பாசன இலாகா) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இரத்தினம் (இளைப்பாறிய ஓவசியர்), திருமதி சிவயோகமலர் — இரத்தினம் ஆகியோரின் அன்பு மகளும், பழம் றோட் கோப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு, திருமதி கந்தையா ஆகியோரின் மருமகளும், சிவகுமார் ((Engineer U. K ), Dr. திருமதி கௌரி ஓம்பகவான் (Colombo), பிறேம்குமார் (Bank of America, Canada), ஆகியோரின் அருமைத் தாயாரும், Dr. ஓம்பகவான், பாமினி, (Engineer U. K.), கிருஷாந்தி (Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரஜீவன், சங்கீதா (U. K.), சுகன்யா, ஐஸ்வரியா ஆகியோரின் பேத்தியாரும், காலஞ்சென்ற தில்லை நடேசன், சாம்பசிவம் (ஓய்வு பெற்ற முகாமையாளர் மக்கள் வங்கி, சுன்னாகம்), Dr. பரமதாசன் (U. K), மகாதேவன் (Director, R. D. A. திருகோணமலை), விமலேந்திரன் (Accountant U. K.), திருமதி இந்திராணி ஜெயபதி ஆகியோரின் அருமைச் சகோதரியும், ஜெயபதி (Accountant, Saudi) அவர்களின் அன்பு மைத்துனியும், திருமதி புஸ்பவதி தில்லைநடேசன் (இளைப்பாறிய ஆசிரியை), திருமதி மங்கையர்க்கரசி சாம்பசிவம் (இளைப்பாறிய ஆசிரியை), திருமதி சறோ பரமதாசன் (U K ), திருமதி மகேஸ்வரி மகாதேவன், திருமதி இரத்தினபூபதி விமலேந்திரன் (Accountant, U. K) ஆகியோரின் மைத்துனியும், தபோதரன், தமயந்தி, தனுஷன், நிருபா, மயூரன், மயூரா, விஜிதா, றதீஸ் ஆகியோரின் மாமியாரும், தயாளி, சியாமினி, தர்ஷனா ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 03-01-93 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. சாம்பசிவம்
(சகோதரன்)

''தமயஸ்தான்''
1 ஆம் கட்டை,
உடுவில்,
சுன்னாகம்.

(23958)

## யோசப் றோசம்மா

யோசப் றோசம்மா காலமாகிவிட்டார் அன்னார் காலஞ்சென்ற நீக்கிலஸ் யோசப்பின் அன்பு மனைவியும், பொன்னுத்துரை, பொன்ராஜா, பாக்கியராஜா, குணரட்ணம், செல்வராணி, புஷ்பராணி, பத்திமா, நொயிலா ஆகியோரின் அன்புத் தாயாரும் வின்சன், அருளம்மா, ராசமணி, எட்னா, டொறெற்றா, சிந்தாத்துரை, செல்லையா, றேமன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 3 மணிக்கு வசந்தபுரத்தில் உள்ள அவருடைய இல்லத்தில் இருந்து நல்லடக்கத்துக்காக இலங்கை பெந்தெகொஸ்தே சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
றேமன் நொயிலா
(மகள்)

2 ஆம் குறுக்குத் தெரு,
வசந்தபுரம்.

(23956)

## திருமதி சிவசம்பு கமலாட்சி

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த திருமதி சிவசம்பு கமலாட்சி 06-01-93 அன்று காலமானார். இவர் சி. சிவசம்புவின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும், பவானந்தன், யோகேஸ்வரி, சரவணபவானந்தன் (கனடா), கருணானந்தன் (சுவிஸ்), ஆறுமுகானந்தன் (உடுப்பிட்டி ப நோ. கூ. ச.), குகேந்திரன் (கனடா), ஆனந்தசுந்தரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோன்மணிதேவி, இராசதுரை வருமானவரிக் கந்தோர், கொழும்பு), சவுந்தரநாயகி (வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியை), லிங்கராணி, பரமேஸ்வரி, சரசமாலா (கனடா), அனுஷியா (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், சண்முகானந்தன் (லண்டன்), காலஞ்சென்ற சரவணானந்தன், சிவரமணன், இராசேஸ்வரன் (லண்டன்), கமலேஸ்வரன், சிவகுமார், சுபத்திரா, தஷ்சாயினி, தயானி, செந்தூரன், அபிராமி, சுபர்னா, அரவிந் (கனடா), பிரணவன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [07-01-93] நண்பகல் 1 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சிவசம்பு

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

[23962]